# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட கலைமாணித் தேர்வு – 2011/2012 (மீள் பரீட்சை)
## (யூலை 2017)

## PHY 101 மெய்யியற் பிரச்சினைகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி–I இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி–II இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

---

## பகுதி–I

01. பின்வரும் வாதங்களை குறியீட்டில் அமைத்து வெண் வரைபடம் மூலம் அவற்றின் வாய்ப்பினைத் துணிக.

(அ) பிராகே ஜேர்மானியரும் பகுப்பாய்வு மெய்யியலாளரும் ஆவார். விக்கின்ஸ்டைன் ஜேர்மானியரும் பகுப்பாய்வு மெய்யியலாளரும் ஆவார். ஆகவே சில ஜேர்மானியர்கள் பகுப்பாய்வு மெய்யியலாளர்கள் ஆவர்.

(ஆ) சில பெண்கள் அன்பானவர்கள். எல்லா பெண்களும் அறிவுடையவர்கள், ஆகவே சில அறிவுடையவர்கள் அன்பானவர்கள்.

(இ) எல்லா மெய்யியலாளர்களும் உண்மையினை தேடுபவர்கள். கலைஞர்கள் மெய்யியலாளர்கள் அல்ல. ஆகவே, கலைஞர்கள் உண்மையினைத் தேடுபவர்கள் அல்ல.

(ஈ) பெரும்பாலான மனிதர்கள் வெளிநாடு செல்ல விரும்புகின்றனர். சில வெளிநாடு செல்ல விரும்புகின்றவர்கள் புத்திசாலிகள். ஆகவே பெரும்பாலான மனிதர்கள் புத்திசாலிகள்.

(4x5=20 புள்ளிகள்)

02. பின்வரும் வாதங்கள் வாய்ப்பானதா? வாய்ப்பற்றதா? என்பதை நியாயத் தொடை அனுமானத்தின் மூலம் தீர்மானிக்குக. வாய்ப்பற்றதாயின் மீறப்பட்ட விதி/விதிகளைக் கூறுக.

(அ) சில மலர்கள் அழகானவை ஏனெனில் எல்லா அழகானவையும் மனத்தை கவர்வன என்பதுடன் சில மனதைக் கவர்வன மலர்கள்.

(ஆ) எல்லா பறவைகளும் முட்டையிடுவன. சில உயிரினங்கள் பறவைகள் அல்ல. ஆகவே உயிரினங்கள் முட்டையிடுவன அல்ல.

(இ) எந்த நாத்திகவாதியும் நல்லவன் அல்ல. எல்லா பொருள் முதல் வாதிகளும் நல்லவர்கள். ஆகவே எல்லா பொருள் முதல் வாதிகளும் நாத்திகர்கள் அல்ல.

(ஈ) சில நடிகர்கள் எழுத்தாளர்களாக இருப்பதுடன் எந்த ஆசிரியனும் நடிகனாக இல்லாததால் சில எழுத்தாளர்கள் ஆசிரியர்கள் ஆவர்.

(4x5=20 புள்ளிகள்)

03. பின்வரும் போலிகளை உதாரணம் தந்து விளக்குக.

1. தடத்தல் போலி
2. பிரிப்புப் போலி
3. உச்சரித்தற் போலி/அழுத்தற் போலி
4. ஆள்நியாயப் போலி

(4x5=20 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்புகள் எழுதுக.

1. சிந்தனை விதிகள்
2. வாய்ப்பும் உண்மையும்
3. பதங்களின் அகலக் குறிப்பும் கருத்துக் குறிப்பும்
4. குறை நியாயத் தொடை

(2x10=20 புள்ளிகள்)

## பகுதி–II

05. உடல் உளப் பிரச்சினை தொடர்பாக டேக்காட்டின் இருமை வாதக் கருத்துக்களை எடுத்துக்கூறி அவற்றை விமர்சன ரீதியாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

06. தண்டனை பற்றிய கொள்கைகளை சுருக்கமாக எடுத்துக்கூறி, அவற்றில் ஏதாவது ஒரு கொள்கையினை விமர்சன ரீதியாக மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

07. கடவுள் இருப்பு தொடர்பாக எவையேனும் இரண்டு கோட்பாடுகளை சுருக்கமாக விளக்கி, அவற்றை விமர்சன ரீதியாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. அறிவின் உருவாக்கம் தொடர்பாக அறிவுமுதல்வாதிகள் முன்வைக்கும் கருத்துக்களை தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

*****